நகராட்சி அலுவலகம்,

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி.

நாள் 24/01/2024

## சாதரணக் கூட்டம்

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நகர்மன்றத்தின் சாதரணக்கூட்டம் எதிர்வரும் **2024**ம் வருடம் **ஜனவரி** மாதம் **31 ம் தேதி புதன் கிழமை காலை** 10.30 மணியளவில் **நகர்மன்றத் தலைவர்** அவர்களின் தலைமையில் மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நடைபெறவிருக்கின்ற சாதரணக் கூட்டத்திற்கான கூட்டப் பொருள்

**பொருள் எண்.1**

நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் (4டி)45 நாள் 08.11.2023 ன் படி, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு (KNMT) திட்டத்தின் கீழ் விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதி பாபநாசம் கோவில் அருகே வாகனக்காப்பகம் மற்றும் உட்கட்மைப்பு வசதிகள் பணி மேற்கொள்ளும் பொருட்டு ரூ. 210.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து, விக்கிரமசிங்கபுரம் நகராட்சி மூலம் ஒப்பந்த விதிமுறைகளின் படி, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 29.12.2023 அன்று இணையதளம் வழியாக (Online) இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர்களின் பெயர் |
|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பாபநாசம் கோவில் அருகே வாகனக்காப்பகம் அமைத்து உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளுதல் | 1. திரு.கே.இராஜா ஒப்பந்தக்காரர், விக்கிரமசிங்கபுரம்<br>2. திரு.வெங்கட்சுப்பையா பெருமாள் ஒப்பந்தக்காரர், திருநெல்வேலி |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்பரீதியான (Technical Bid) ஒப்பந்தப்புள்ளிக்கான உறை 09/01/2024 அன்று பரிசீலனை செய்யப்பட்டதில், திரு. கே.இராஜா, ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் அவர்களின் தொழில்நுட்பரீதியான ஒப்பந்தப்புள்ளி தகுதி வாய்ந்தாக உள்ளது எனவும் , திரு.வெங்கட்சுப்பையாபெருமாள் அவர்களின் தொழில்நுட்பரீதியான ஒப்பந்தப்புள்ளி தகுதியற்ற ஒப்பந்தப்புள்ளியாக உள்ளதால் அதனை நிராகரிக்கப்பட்டு, தகுதி வாய்ந்த திரு. கே.இராஜா அவர்களின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி (Financial Bid) 10.01.2024 அன்று திறக்கப்பட்டது. மேற்கண்ட விலைவிகித ஒப்பந்தப்புள்ளியில், ஒப்பந்தக்காரர் திரு. கே.இராஜா அவர்கள் மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டு விலை விகிதத்தில் இருந்து 0.020% சதவிகிதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதால், அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்க வேண்டி, மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில், தொழில்நுட்பரீதியான ஒப்பந்தப்புள்ளியில் தகுதி வாய்ந்ததாகவும், விலைவிகித ஒப்பந்தப்புள்ளியில், மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. கே.இராஜா என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசரம் கருதி, மன்ற அனமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 392 / மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

தூய்மை இந்தியா திட்டம் 2.0 (SBM2.0) திட்டத்தின் கீழ் கழிவு நீர் மேலாண்மைக்காக 6.3 மில்லியன் லிட்டர் கொள்ளவு கொண்ட சுத்திகரிப்பு நிலையம் அமைக்க சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் 9192/2022/எஸ்பிஎம்1 நாள் 17.11.2023 ல், தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் மூலம் (TWIC)விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, இந்நகராட்சி மூலம் 07.12.2023 அன்று மேற்கண்ட பணி மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் (TWIC)விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய 1 மில்லியன் லிட்டர் கொள்ளவிற்கு ரூ.1.00 இலட்சம் வீதம் 6.3 மில்லியன் லிட்டர் கொள்ளவிற்கு ரூ.7.00 இலட்சம் மற்றும் அதற்கான GST வரி 18% ரூ.1.26 இலட்சம் சேர்த்து ரூ. 8.26 இலட்சம் முன்பனமாக செலுத்த கோரி 28.11.2023 அன்று கடிதம் பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து, பணியின் அவசியம் கருதி மேற்கண்ட தொகையினை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து செலுத்தியதை மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலகக்குறிப்பு**

கழிவு நீர் மேலாண்மை பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதியும், நகராட்சிநிர்வாக இயக்குநர் அவர்களால் தேர்வு செய்யப்பட்டுள்ள தமிழ்நாடு நீர் முதலீட்டு கழக நிறுவனத்தின் (TWIC) கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளபடி, மேற்கண்ட தொகையினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 393 / மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் 2023-24 ன் கீழ் காரையார் சின்னமயிலார் காணிக்குடியிருப்புக்கு செல்ல இரும்பு பாலம் அமைக்க நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து, பணி மேற்கொள்ள மேற்கண்ட இடத்தில் மண் பரிசோதனை செய்யவும் , அதன் அடிப்படையில் பாலத்திற்கான வடிவமைப்பு வரைபடம்(Structural Design Drawing) தயார் செய்ய வேண்டியும், திருநெல்வேலி அரசு பொறியியற் கல்லூரியில் இருந்து வரப்பெற்ற கேட்புத் தொகை ரூ. 47200/- மற்றும் ரூ.70800/- ஐ இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலுத்தியதை மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலகக்குறிப்பு**

சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்ட பணியின் அவசியம் கருதி, மேற்கண்ட பணி மேற்கொள்ளும் பொருட்டு தொழில்நுட்ப ரீதியாகவும், தேவைபடும் மண் பரிசோதனை அறிக்கை மற்றும் வடிவமைப்பு வரைபடம்(Structural Desgin Drawing) தயார் செய்யவும் பெறப்பட்ட கேட்புத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 394 / மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

விக்கிரமிசிங்கபுரம் நகராட்சி அலுவலக நகர்மன்றத் தலைவர் அவர்களின் ஈப்பு வாகனம் எண் TN72CU6879 க்கான கொள்முதல் செய்யப்பட்ட போது பொருத்தப்படாத கூடுதல் உபகரணங்கள் பொருத்த வேண்டி 29.12.2023 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | வேலையின் விவரம் | நியூ கார், திருநெல்வேலி | கணேஷ் கார் ஜீவல்ஸ், திருநெல்வேலி | தலக்குடையார் கார் ஜீவல்ஸ், திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலக நகர்மன்ற தலைவர் அவர்களின் வாகனத்திற்கு TN 72 CU 6879 கொள்முதல் செய்யப்பட்ட போது பொருத்தப்படாத கூடுதல் உபகரணங்கள் பொருத்த வேண்டி | Rs.75400/- | Rs.82350/- | Rs. 79300/- |

**அலுவலகக்குறிப்பு**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலக நகர்மன்ற தலைவர் அவர்களின் ஈப்பு வாகனம் கொள்முதல் செய்தபோது பொருத்தப்படாத கூடுதல் உபகரணங்கள் பொருத்த வேண்டி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திருநெல்வேலி நியூ கார், நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்ற பணி உத்திரவு வழங்கியமைக்கும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 395 / மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

கலைஞர் நகர்ப்புற மேம்பட்டு திட்டம் 2023-24 ன் கீழ் விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதி பாபநாசம் கோவில் அருகே வாகனக்காப்பகம் அமைக்கும் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து, பணி மேற்கொள்ள வேண்டி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை, ஒப்பந்தப்புள்ளிகள் விதிமுறைகளின் கீழ், மாநில அளவிலான ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும், நாளிதழிலும் விளம்பரம் செய்ய வேண்டி, சென்னை செய்தி மக்கள் தொடர்புதுறை இயக்குநர் அவர்களின் வழியாக வெளியிட்ட வகைக்கு, வரப்பெற்ற கேட்புத் தொகை ரூ. 85000/- மட்டும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்த செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

ஒப்பந்தப்புள்ளிகளின் விதிமுறைகளின் கீழ், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை சென்னை செய்தி மக்கள் தொடர்புதுறை இயக்குநர் அவர்களின் வழியாக விளம்பரம் செய்யப்பட்ட வகைக்குரிய கேட்புத் தொகை ரூ.85000/- மட்டும் இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 396 / மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2018-19 ன் கீழ், திடக்கழிவு மேலாண்மை பணிக்காக ரூ.53.00 இலட்சம் மதிப்பீட்டில், பழைய வார்டு எண் 3 இராமலிங்கபுரம் பகுதியில் நுான்னுயிர் உரக்குடில் அமைக்கும் பணியினை மேற்கொண்ட ஒப்பந்தக்காரர் திரு. இராஜாமுகம்மது அவர்கள், தனக்கு வழங்கப்பட்ட பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்பட்டு வைப்புத் தொகையாக உள்ள ரூ.204155/- மட்டும் திரும்ப வழங்க கோரியுள்ளார். மேற்கண்ட வைப்புத் தொகை பிடித்தம் செய்து மூன்றாண்டுகள் கடந்த

நிலையில், காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளதால், இத்தொகையினை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மேற்கண்ட பணிக்கு பட்டியல் தொகை 01.11.2019 அன்று வழங்கப்பட்டு, பட்டியலில் 5 சதவிகிதம் வைப்புத் தொகையாக பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகை வழங்கப்பட்டு மூன்றாண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டப்படியால், காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டில் இருப்பாக உள்ளது. மேற்கண்ட தொகையினை தற்போது ஓப்பந்தக்காரர் திரு.இராஜாமுகம்மது அவர்களுக்கு திரும்ப வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 397 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 7**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் சேகரமாகும் குப்பைகளை, மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என பிரிக்கப்பட்டு, மக்கும் குப்பைகளை நகராட்சி பகுதியில் உள்ள நுன்னுயிர் குடிலில் மறுசுழற்ச்சி செய்யப்பட்டு உரமாக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. மேலும் மக்காத குப்பைகளில் மறு சுழற்ச்சி செய்ய இயலாத பிளாஸ்டிக் கழிவுகளை, திருச்சி அரியலூர் சிமெண்ட் நிறுவனத்திற்கு மாதம் இரண்டு முறை பேப்பர்மென் என்ற நிறுவனம் மூலம் அனுப்பப்பட்டு வந்தது., தற்போது மேற்கண்ட பேப்பர்மென் நிறுவனத்திடமிருந்து வாகனம் ஏதும் அனுப்பப்படவில்லை என்பதால், நகராட்சி உரக்கிடங்கு பகுதியில் மறு சுழற்ச்சி செய்ய இயலாத பிளாஸ்டிக் கழிவுகள் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருநெல்வேலி அவர்கள் மற்றும் நகராட்சிகள் நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் வழிகாட்டுதலின்படி, திருநெல்வேலி தாழையூத்து சங்கர் சிமெண்ட் நிறுவனத்திற்கு தனியார் வாகனம் மூலம் அனுப்ப அறிவுறுத்தப்பட்டது. அதன் படி ,இந்நகர் பகுதியில் இருந்து தாழையூத்து சங்கர் சிமெண்ட் நிறுவனத்திற்கு பிளாஸ்டிக் கழிவுகளை கொண்டு செல்ல தனியார் வாகனம் பயன்படுத்தவும், ஒரு தடவை சென்று வர ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 7000/- மட்டும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

திடக்கழிவு மேலாண்மை பணி மற்றும் பொது சுகாதாரத்தின் அவசியம் கருதியும், நகராட்சி உரக்கிடங்கில் தேக்கி வைக்கப்பட்டுள்ள மறுசுழற்ச்சி செய்ய இயலாத பிளாஸ்டிக் கழிவுகளை அப்புறப்படுத்த வேண்டியதின் அவசியம் கருதியும் மேற்கண்ட செலவினத் தொகையினைஇந்நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 398 / மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டத்தின் கீழ் இந்நகராட்சி அய்யனார்குளம் பகுதியில் ஒருங்கிணைந்த சமையற்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சமையற்கூடத்தின் பாதுகாப்பு கருதி கட்டிட பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் அவசியமா க உள்ளது. பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சி பணி மேற்பார்வையாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.25000/- மட்டும் மன்றத்தின் அனுமதிக்கு மற்றும் பணிகள் மேற்கொள்ளவும் , செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு**

ஒருங்கிணைந்த சமையற்கூடத்தின் பாதுகாப்பு அவசியம் கருதி, மேற்கொள்ளப்படும் பராமரிப்பு பணிகளுக்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும், பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 399 / மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதி வம்பளந்தான் பாறை தரை மட்ட நீர் தேக்கத் தொட்டி மற்றும் தலையணை நீரேற்று நிலையத்தில் குடிநீர் திட்ட பராமரிப்பு பணி மேற்கொள்ளும் பொருட்டு, இந்நராட்சி பணி மேற்பார்வையாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், இப்பணியினை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

குடிநீர் பராமரிப்பு பணியின் அவசியம் கருதி, தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கும் மேற்கண்ட பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்க்லாம்.

**தீர்மான எண் : 400 / மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொதிகையடி தூயநீரேற்று நிலையம், தலையணை நீரேற்று நிலையம், வம்பளந்தான் பாறை, ஓட்டன் குளம் மற்றும் அலுவலகத்தில் உள்ள ஜென்ரேட்டர்களை பொது பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டியாகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 350000/-க்கு மன்ற அனுமதி வேண்டியும், மேற்கண்ட பராமரிப்பு பணிகளை உடன் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பணியின் அவசியம் கருதி , பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 401 / மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 21 அம்பலவாணபுரம் மெயின் ரோடு பகுதியில் உள்ள பேரூந்து நிலையம், வார்டு எண் 1 கோட்டைவிளைப்பட்டி தெற்கு தெரு மற்றும் வார்டு எண் 12 பொதிகையடி பகுதியில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கும், புதியதாக மின் இணைப்பு பெறவும், அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.15000/- மட்டும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பணியின் அவசியம் கருதி , பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 402 / மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

(ஓம்) திரு. எஸ்.பி.எம்.செல்வசுரேஷ் பெருமாள்

**நகர்மன்றத் தலைவர்**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி

This document was created with the Win2PDF “Print to PDF” printer available at

https://www.win2pdf.com

This version of Win2PDF 10 is for evaluation and non-commercial use only.
Visit https://www.win2pdf.com/trial/ for a 30 day trial license.

This page will not be added after purchasing Win2PDF.

https://www.win2pdf.com/purchase/